சுருக்கம்

பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப் பணி - கால்நடை பராமரிப்புத் துறை - கருணை அடிப்படையில் பணி நியமனம் - திரு. பெ. ஆனந்த், த/பெ திரு.எம்.பெரியசாமி (லேட்) - இளநிலை உதவியாளராக பணி நியமனம் - தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அரசாணைக்கு விலக்களித்தும் மற்றும் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில் விதி 12(bbb) மற்றும் 23 (a)(ii) (தற்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 20(6)(a)(b) மற்றும் 28(2)) ஆகியவற்றை தளர்வு செய்து பணிவரன்முறை செய்தல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் (காப-7) துறை

பிலவ வருடம், திருவள்ளுவர் ஆண்டு 2052, ஐப்பசி மாதம் 10-ம் நாள்

அரசாணை (டி) எண். 286 நாள் 27.10.2021

படிக்கப்பட்டது:

1. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் கடித ந.க.எண். 39616/ஆர்.3/ 2015, நாள் 29.11.2019 மற்றும் 1.3.2021.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.

---

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் கடிதத்தில், புதுக்கோட்டை கோட்டம், வல்லத்திராகோட்டை கால்நடை மருந்தகத்தில், கால்நடை பராமரிப்பு உதவியாளராக பணியிலிருக்கும்போது, மரணமடைந்த திரு.எம்.பெரியசாமி என்பவரது மகன் திரு.பெ.ஆனந்த், என்பவருக்கு கருணை அடிப்படையில் புதுக்கோட்டை மண்டலம், அறந்தாங்கி, கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் 07.09.2016 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும் தனியரின்

பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 07.09.2016 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறும் இயக்குநர் அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் கருத்துருவை, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி அரசு நன்கு ஆய்வு செய்து, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட திரு. பெ.ஆனந்த், என்பவரின் பணியினை தனியர் பணியில் சேர்ந்த நாளான 07.09.2016 முற்பகல் முதல் வரன்முறை செய்ய ஏதுவாக கருணை அடிப்படையில் நியமனம் கோரி விண்ணபித்த நாளில் 18 வயது பூர்த்தியடையாததால், தனியர் சார்பாக அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020-க்கு விலக்களித்தும் மற்றும் அப்போது நடைமுறையிலிருந்த தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில் விதி 12(bbb) (தற்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 20(6)(b)) மற்றும் பணப்பலன்கள் நியமன நாளிலிருந்து முன்தேதியிட்டு வழங்க ஏதுவாக அப்போதைய தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில் விதி 23(a)(ii) (தற்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 28(2)) ஆகியவற்றை தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-ல், பிரிவு 58-ன் கீழ் மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி தளர்வு செய்து தனியர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 07.09.2016 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

3. கால்நடை பராமரிப்புத் துறையில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திரு. பெ.ஆனந்த், த/பெ. திரு.எம்.பெரியசாமி (லேட்), என்பவரின் பணியினை, இளநிலை உதவியாளர் பணியிடத்தில் 07.09.2016 முற்பகல் முதல் வரன்முறை செய்யப்படுவதால், இதனை நியமன அலுவலருக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்வதுடன், இது தொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறது. மேலும் இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்வதால், ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதியத் தொகை ஏதும் நிலுவை இருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தனியர் தகுதியடையவராகிறார். மேலும் தனியரின் அசல் ஆவணங்கள் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. அதனைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப் பணிக்கப்படுகிறது.

4. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.17835/க்யூ.1/2021-1, நாள் 13.10.2021 மற்றும் மனிதவள மேலாண்மை துறையின் அ.சா.கு. எண்.32874/ஜி.2/2021, நாள் 21.10.2021-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தெ. சு. ஜவஹர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

இயக்குநர், கால்நடை பராமரிப்பு (ம) மருத்துவப் பணிகள், சென்னை-35.
திருபெ. ஆனந்த், இளநிலை உதவியாளர் (இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை-35. மூலமாக).
மாநில கணக்காயர், சென்னை-18/18 (பெயரில்)
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்.

நகல்

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (மீன்வளம் - மீனவர் நலம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (தொழிலாளர் நலன் - திறன் மேம்பாட்டுத் துறை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு /உதிரிப்படிகள்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்
28.10.21